திட்டக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : கோ. முரளிதரன் B.Sc,

ந.க.எண் :1074/2024/எப்1 நாள். 20.01.2026

பொருள் : மனைப்பிரிவு– திட்டக்குடி நகராட்சி – திட்டக்குடி கிராமம் சர்வே எண். எண். 3/1B, 3/3B2, 3/1C2, 3/5A2, 3/2, 3/4, 3/6, 2/4Bல் 2.39 ½ ஏக்கர் அல்லது 9705.00 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவினை அங்கீகரித்து இறுதி உத்தரவு வழங்குதல் தொடர்பாக

பார்வை :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைய வழி கடிதம் ந.க..எண். 527T0YAC/2024/TCP நாள் 23.07.2024
2. நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 1394/2025
3. சார்பதிவாளர், திட்டக்குடி அவர்களின் கடித ந.க.எண்.103/2024 நாள். 28.08.2024
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள். 03.09.2025 மற்றும் 28.08.2025
5. நகராட்சி பொறியாளர், திட்டக்குடி அவர்களின் குறிப்பு நாள். 25.07.2025
6. திரு. தே. பிச்சமுத்து த/பெ தேவராஜன், திட்டக்குடி , என்பவரின் மனு நாள்.03.08.2024
7. இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 505 நாள். 29.12.2025

****

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைவழி நடவடிக்கைகள் கடிதத்தில் திட்டக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட திட்டக்குடி கிராமம் சர்வே எண்.3/1B, 3/3B2, 3/1C2, 3/5A2, 3/2, 3/4, 3/6, 2/4Bல் 2.39 ½ ஏக்கர் அல்லது 9705.00 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். 84/2024 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் மனுதாரரின் கடிதத்தில் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 1394/2025ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது. சிறப்பு நிபந்தனை எண். 3ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை நகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உரிமை மாற்றம் செய்து சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் 4–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலபயன்மாற்ற கட்டணமாக அரசுக்கு செலுத்த பார்வை 3–ல் காணும் சார்பதிவாளர், திட்டக்குடி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பின்படியும் மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி மனைப்பிரிவில் தெருவிளக்கு வசதிக்கான கட்டணங்கள் பார்வை 4–ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் கட்டணங்கள் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவுதாரரால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	விவரம்	தொகை	கட்டணம் செலுத்திய விபரம்
1	நிலபயன்மாற்றக்கட்டணம்	ரூ.28,800/-	E.Ch.No.20250908023197 நாள்.08.09.2025
2	கூராய்வு கட்டணம் 1 மனைக்கு 1000 வீதம் 50 மணைகளுக்கு	ரூ.50,000/-	Rec.No.25-26/0006350 நாள்.04.09.2025
3	வளர்ச்சி கட்டணம் (தெருவிளக்கு வசதி)	ரூ.1,50,000/-	Rec.No.25-26/0005817 நாள்.28.08.2025
4	மனைப்பிரிவு அனுமதி கட்டணம்	ரூ.50,000/-	Rec.No.25-26/0006352 நாள்.04.09.2025
6	5 ஆண்டுகளுக்கு பின் திரும்ப பெறக்கூடிய வைப்பு தொகை (1 ஏக்கருக்கு 1.00/- இலட்சம் வீதம்)	ரூ.2,40,000/-	Rec.No.25-26/0006351 நாள்.04.09.2025
7	கொடி நாள் தொகை	ரூ.10,000/-	Ref No. FL25064608497 நாள்.20.01.2026
மொத்தம்		ரூ.5,28,800/-	

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்திடவும் மற்றும் மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் 2968.50 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு 104.00 ச.மீ நிலங்களை ஏற்கவும் பார்வை 7ல் காணும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 505 நாள். 29.12.2025ல் அனுமதி அளித்துள்ளது.

திட்டக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட திட்டக்குடி கிராமம் சர்வே எண். 3/1B, 3/3B2, 3/1C2, 3/5A2, 3/2, 3/4, 3/6, 2/4Bல் 2.39 ½ ஏக்கர் அல்லது 9705.00 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். 84/2024 (இணையதள ஒப்புதல்) பார்வை 1-ல் காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

20/1/26

ஆணையாளர்

திட்டக்குடி நகராட்சி

20/1/26

இணைப்பு மனைப்பிரிவு வரைபடம் -1

பெறுதல்

திரு. தே. பிச்சமுத்து த/பெ தேவராஜன்

பெருமுளை ரோடு,

திட்டக்குடி

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திட்டக்குடி
3. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திட்டக்குடி